# சங்கப்பாடல்களுள் அறிவியல் கூறுகள்

**முனைவர் பெ. இளையாப்பிள்ளை**
**பேராசிரியர்/துறைத்தலைவர்**
**இலக்கியத்துறை**
**தமிழ்ப் பலக்லைக்கழகம், தஞ்சாவூர் - 10**

57

**முன்னுரை :**

தமிழின் தமிழரின் பெருமையை இன்று வரை உலகறியச் செய்துப் பெரும் பங்கை ஆற்றும் நம் தொன்மை மரபாம் சங்க இலக்கிய பாடல்கள் அனைத்தும் நம்மை மேம்படுத்துபவைகளாக விளக்குகின்றன.

தமிழர்களுக்கென வரலாறு, இலக்கியம், பெருமை ஆகிய அனைத்தும் உண்டு என்றதை உலக அரங்கில் தன்னை நிலை நிறுத்திக்கொண்டதற்கு ஆதாரமாக இருந்தவை சங்க இலக்கியங்களாகும். பலதரப்பட்ட தொழில் நிலையில் உள்ளோரும் பெண்களும், நாடாளும் மன்னருக்கும் இதில் பங்காற்றி உள்ளனர். சங்க இலக்கியங்கள் அக்காலகட்டத்தில் வாழ்ந்த தமிழர்களின் தினசரி வாழ்க்கை நிலைமைகளைப் படம்பிடித்துக் காட்டுவதாய் உள்ளன. பண்டைத்தமிழரது காதல், போர், வீரம், ஆட்சியமைப்பு, வணிகம் போன்ற நடப்புகளைச் சங்க இலக்கியப் பாடல்கள் வழி அறிய முடிகிறது என்ற கருத்தின் மூலம் இவை சார்ந்த அனைத்திலும், அறிவியலும் இணைந்து இயங்கியுள்ளது என்பதை மறுக்க இயலாத வண்ணம் விளங்குகிறது.

அறிவியலைச் சங்க இலக்கியப் புலவர்கள் திறம்பட கையாண்டும் உள்ளனர் என்பது சிறப்பிற்குரியதாக அமைகிறது.

**சங்கப் பாடல்கள் :**

தமிழ்மொழியைப் போற்றி வளர்க்கும் வண்ணம் தமிழ்ச் சங்கங்கள் வைத்து நடத்தியதாகப் பல்வேறு சான்றுகள் கிடைக்கின்றன. சங்ககாலத்தில் உள்ளூர் அளவில் பண்டமாற்றுமுறை வணிகமே பெரும்பான்மையாக நடைபெற்று வந்தது என்பதனை சங்ககாலப் பாடல்கள் மூலம் அறியலாம்.

தமிழர்கள் அயல்நாட்டினரோடு கொண்டிருந்த தொடர்பை பட்டினப்பாலை என்னும் பத்துப்பாட்டு இலக்கிய பாடல்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

அச்சங்கங்களில் தமிழ்ப் புலவர்கள் இருந்து தமிழ் ஆய்வு செய்ததாகவும், தமிழில் பல்வேறு செய்யுள்களை இயற்றியதாகவும் சங்க இலக்கியங்கள், இறையனார் களவியல் உரை போன்ற

நூல்களால் அறியலாம். தமிழ் என்ற சொல் இனிமை என்ற பொருளை உடையது. இனிமையும், நீர்மையும் தமிழ் எனலாகும்' என்று பிங்கல நிகண்டு கூறுகின்றது.

**“நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்**

**கலந்த மயக்கம் உலகம் ஆதலின்**

**இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாமைத்**

**திரிவுஇல் சொல்லொடு தழாஅல் வேண்டும்” (தொல்.பொருள்)**

உலகமானது நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பெரும் பூதங்கலந்த மயக்கமா தலால், மேற்கூறப்பட்ட பொருள்களைத் திணையும் பாலும் வழுவுதல் இல்லாமல், திரிவுபடாத சொல்லோடு தழுவுதல் வேண்டும் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். இவ்வண்ணம் தொல்காப்பியர் ஒரு விண்வெளி விஞ்ஞான உத்திகள் நமக்கெல்லாம் கிடைத்தற்கரிய ஒன்றாகும்.

**சூழல் அமைப்பு :**

பறவைகள், விலங்குகள், பூச்சிகள், நீரில் வாழும் உயிரினங்கள், மரங்கள், செடிகள், கொடிகள், மலைகள், ஆறுகள் யாவற்றையும் இவ்விலக்கிய பாடல்களில் காணலாம். இவ்வாறக இடம்பெறும் சங்க இலக்கிய பாடல்களின் சூழல் அமைப்புகள் ஒரு மாறுபட்ட தன்மையை ஒத்தது. ஏனென்றால் இலக்கண, இலக்கிய புலமைப் பெற்ற புலவர்கள் அவர்கள் கற்று இருந்த அறிவுத் திறமைகளைத் தன் கவிபாடல்கள் மூலம் விளக்கும் காலகட்டமாக இருந்தன.

சங்ககால இலக்கிய மொழிகள் வாசிப்பதற்கு தனியாகப் பயிற்சி எடுத்துக்கொள்ளத்தான் வேண்டும். அது மொழியின் பழைய சொற்களஞ்சியத்தை, பழைய இலக்கணத்தை, பழைய சொற்கூட்டு முறையை அறிந்து கொள்வதாகவே இருக்க முடியும்.

ஆண் குழந்தை பெற்றெடுப்பது என்பது தொன்று தொட்டுப் பாராட்டப்பட்டுக் கௌரவிக்க, வாரிசுகளைப் பெற்றுக் குடும்பத்திற்குப் புகழ் வாங்கிக் கொடுத்தது என்பதைக் குறித்த கருத்தை;

**“கடும்பு உடைக் கடுஞ்சூல் நம் குடிக்கு உதவி**

**நெய்யடு இமைக்கும் ஐயவித் திரள் காழ்**

**விளங்கு நகர் விளங்கக் கிடந்தோள் குறுகி**

**புதல்வன் ஈன்றெென” (நற்றிணை)**

என்ற நற்றிணைப் பாடல் அழகுற எடுதியம்புகிறது.

**இயற்கை அறிவியல் :**

சங்க இலக்கியங்களைப் பொருத்தவரை இயற்கை அமைப்போடு ஒன்றாக இணைந்து இயங்குபவையாகும்

**“செஞ்ஞாயிற்றுச் செலவும்**

**அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்**

**பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்**

**வளி திரிதரு திசையும்**

**வறிது நிலைஇய காயமும் என்றிவை**

**சென்றளந்து அறிந்தோர்போல என்றும்**

**இனைத்து என்போரு முளரே” (புறநானூறு)**

என்று புறநானூற்றில் புலவர் பெருமக்கள் கதிரவனின் செயல்களால் நிகழும் நிகழ்வுகளை அறிவியல் சிந்தனையுடன் பாடியுள்ள பாங்கு அவர்களின் அறிவுத் திறத்தையும் அறிவியல் திறத்தையும் எடுத்தியம்புகிறது.

பிறக்கும்போது குழந்தை பல மாறுபாட்டுடன் பிறப்பது உண்டு. அதில் ஒருவகை கவைமகன் எனும் வியப்பான பிறவி. தாயின் கருவில் இரு பகுதிகளாகப் பிரிந்து உருவும், அதன் நிழலும் போல ஒன்றுபட்டு உருவாகிப் பிறக்கும் ஒட்டிய இரட்டைப் பிள்ளையைத்தான் கவைமகன் எனக் குறுந்தொகை கூறுகிறது.

**“கவை மக நஞ்சு உண்டா அங்கு**

**அஞ் சுவல் பெரும**

**என் நெஞ்சத்தானே” (குறுந்தொகை)**

இது எங்லகோ ஒருவர், இவ்வித மாறுபட்ட பிறவியாகப் பிறப்பர் என்ற உண்மையை ஒரு கணக்கீடு தெரிவிக்கிறது. பிறவிக் குறைபாடு கூட குறுந் தொகையில் துல்லியமாகப் பதிவு செய்யப்பட்டு உள்ளது என்பது அறிய வருகிறது. இந்தப் பாடலைப் பாடிய புலவரும் கலைமகனார் என அழைக்கப் பெறுகிறார்.

பிள்ளைப் பேற்றின் பின் ‘நெய்யணி முயக்கம்’ என்று குறிப்பிடக் கூடிய எண்ணெய் நீராடும் செயலைப் பெண்கள் மேற்கொண்டனர் என தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

இது போலவே பிரசவித்த பெண்ணை நெய்யில் குளிப்பாட்டும் வழக்கு சங்க காலத்தில் இருந்து வந்துள்ளதை நற்றிணை,

**“பசு நெய் கூர்ந்த மென்மை யாக்கை**
**சீர்கெழு மடந்தை ஈர்க்கை பொருந்த” (நற்றிணை)**

என்ற நற்றிணைப் பாடலின் வாயிலாக இச்செய்தியை அறியலாம்.

**மருத்துவம் :**

உணவு என்பதற்கு தமிழில் ஒரு மிகச் சிறந்த வரையறை கொடுத்திருக்கிறார்கள். உணவு என்றால் என்ன என நீங்கள் தேடினால், உலகில் ஒவ்வொரு அறிவியலும் அதை ஒவ்வொரு வித கண்ணோட்டத்தில் அணுகுவதை அறியலாம்.

சங்ககால மக்கள் ஏராளமான மூலிகைகள் பற்றியும் அவற்றின் நோய் தீர்க்கும் பண்புகள் பற்றியும் நன்கு அறிந்திருந்தனர். இருப்பினும், இன்று போல் அன்றும் பலவிதமான நோய்களாலும் உடல் ஊனங்களாலும் மக்கள் பாதிக்கப்பட்டிருந்தாரென்பதைத் தமிழ் இலக்கிய நூல்கள் நன்கு வெளிப்படுத்தியுள்ளன.

தமிழரின் மருத்துவமுறையில் இயற்கையில் கிடைக்கக்கூடிய மரம், செடி, கொடிகள் போன்றவை மருந்தாகப் பயன்படும் நிலையினைக் காணமுடிகின்றது.

**“புளிங்காய் வேட்கை தந்து மலர்ந்த**

**இவள் வயா நோய்க்கே” (ஐங்குறுநூறு)**

**“இன்னுயிர் செய்யும் மருந்து” (கலித்தொகை)**

இங்கு கர்ப்பக்காலத்தில் ஏற்படுகின்ற வேட்கையானது ‘வயா’ என்று இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

**முடிவுரை :**

மனிதன் தோன்றிய நாளிலிருந்தே நோய்களும் காணப்படுகின்றன. நோய்களுக்கான மருத்துவ முறைகள் மனிதனுடைய அறிவின் விளைவாக ஏற்பட்டவையாகும். மனிதனுடைய அறிவின் படிநிலை வளர்ச்சியாகப் படிப்படியாகவே மருத்துவ முறைகளும் வளர்ச்சி பெற்று வந்துள்ளன. பழந்தமிழர்கள் நோயால் அவதிப்பட்ட போது, அதனைத் தீர்க்கும் வழிமுறைகளைத் தேடிக் கண்டனர். இன்றைய மருத்துவ உலகின் முன்னோடியாகத் தமிழர்கள் கண்ட மருத்துவம் திகழ்கிறது. இன்றைய சித்த மருத்துவம் போன்ற மருத்துவ முறைகள் அன்றைய இயற்கை மருத்துவத்திலிருந்தே வளர்ச்சி பெற்றிருக்கின்றன. சங்க இலக்கியங்கள் முதல் தற்கால இலக்கியங்கள் வரையுள்ள அனைத்து இலக்கியங்களிலும் உடல்நலத்தைப் பேணக்கூடிய மருத்துவச் செய்திகள் பொதிந்து கிடக்கின்றன. தமிழ் இலக்கியமானது, ஆரோக்கியமான வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவத்தின் மகத்துவத்தினை நமக்குப் போதிக்கிறது.

**உசாத்துணை :**


- தொல்காப்பியம் (இளம்பூரணர் உரை)
- நற்றிணை (பின்னத்தூரார் உரை)
- சின்னசாமி – தமிழ்நாட்டு மருத்துவம்
- அ. தட்சிணாமூர்த்தி – தமிழர் நாகரிகமும் பண்பாடும்